REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55680

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 4உ சனி (18—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 5உ ஞாயிறு (19—6—55) [இதழ் 4

## அமெரிக்காவில் 28,000 கப்பல் தொழிலாளர் வேலைநிறுத்தம்

28,000 அமெரிக்க கப்பல் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் விடுபட்டிருப்பதின் விளைவாக, துறைமுகங்களில் கப்பல்கள் செயலற்றுவிட்டன என்று தெரியவருகிறது.

கூலி உயர்வு பற்றி தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் கப்பல் கம்பெனிகளுக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டதின் எதிரொலியே இப்போதைய வேலைநிறுத்தம் என்று தெரிகிறது.

# 'குறிப்பிட்ட ஒருமொழியைதேசியமொழியாக்க முடியாது'

## 'அம்முயற்சியால் சந்தேகமும் அதிருப்தியும்தான் வளரும்'

## 'பல்வேறு மொழிகளிலிருந்து ஒரு கூட்டு மொழி ஆக்க வேண்டும்'

## 'பாரசீக மொழி ஆதிக்கத்தைத் தொலைக்க முடியவில்லையே'

## 'ஆங்கில மொழிப் பிடிப்பை அகற்றுவதில் வெற்றி பெறுவரா?'

பம்பாய் கவர்னரின் கருத்துரை

"குறிப்பிட்ட உருவில் ஏதாவது ஒரு மொழியை தேசிய மொழியாக மக்கள் அனைவரையும் ஒப்புக்கொள்ளச் செய்வது என்பது எனக்கு உடன்பாடு அல்ல; அத்தகைய முயற்சி, மகத்தான சந்தேகங் கொள்ளவும், அதிருப்தி அடையவும் செய்யும்; அவ்வாறு சிலரைச் செய்தும் இருக்கிறது."

"என்வே, நாட்டின் உடனடி தேவையாக இருப்பது அனைவராலும் அறிந்துகொள்ள முடிகிறது. நில்விவரும் பல்வேறு மொழிகளிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு மொழியை, ஒரு பொது மொழியாகக் கொள்ளுவதேயாகும். அத்தகைய மொழி, மக்களின் அபிலாஷைகளையும், இருந்துவரும் சூழ்நிலையையும் வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றுள்ளதாக இருந்தாக வேண்டும். டெக்கான் மொழிக் கல்லூரி மேற்கொண்டிருக்கும் ஆராய்ச்சியின் விளைவாக, மக்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிற ஒரு பொது மொழி உருவாகக்கூடும் என நான் நம்புகிறேன்."

வட்டார மொழியை மிகைபட வற்புறுத்துவது, நாட்டின் முன்னேற்றத்தை உருவாக்குவதற்கு உதவாது. கல்வி எளிதாக்கப்பட வேண்டியது உண்மைதான். ஆனுல், ஒவ்வொருவரையும், அவரவர்களுடைய தாய்மொழியில் பயிற்றுவிப்பது என்பது இயலாத ஒன்ருகும்."

இச்சீரிய கருத்துக்களை, பம்பாய் கவர்னரான அரிகிருஷ்ண மகதாப், பூனு தட்சிண மொழிக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கோடைக் கால மொழிக் கல்லூரியில் பயிற்சி பெற, பல மாநிலங்களிலிருந்தும் நூற்று அறுபது மாணவர்களுக்கு அதிகமானவர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றுள்ளனர்.

"நாடு, பல துண்டுகளாகப் பிளவு பட்டுக்கிடந்ததற்கு ஒரு பொது மொழி இல்லாததே காரணமாகும்," எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆங்கில மொழி குறித்து அவர் பேசும்பொழுது, ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட வேண்டும் என்ற எண்ணம் சிலரிடம் இருந்து வருவது வருத்தத்தக்கதாகும் என்றும், கடந்த இருநூறு ஆண்டுக் காலமாக இந்திய மக்களிடம் ஆங்கில மொழி பெற்றுள்ள செல்வாக்கையும், அதனுல் வரலாறு செப்பனிடப்பட்டுள்ளதையும் அவர்கள் மறந்துவிட முயற்சிக்கின்றனர் என்றும், பல துறைகளில் ஆங்கிலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும், அதை அறவே அகற்றிவிடுவது என்பது வெறும் விளையாட்டு அல்ல என்றும், அகற்றிவிட நாம் முயற்சித்த போதிலும்கூட நாம் ஆங்கிலத்தை அகற்றிவிட முடியாது என்றும் விளக்கிக் கூறினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

டாக்டர் லோகியாவின் கணிதத்தில்

## இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் எதிர்காலம்!

### ம. சோ. கட்சியைத் திருத்துவதா? தனிக் கட்சி அமைப்பதா?

"இந்தியாவைத் தவிர, வேறெல்லா இடங்களிலும் கம்யூனிசத்தை பண்டித நேரு விரும்புகிருர்."

"கம்யூனிஸ்டுகள், இந்தியாவைத் தவிர, வேறெல்லா இடங்களிலும், நேரு கொள்கையை விரும்புகின்றனர்."

"ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை இப்போதிருப்பதைப் போன்றே தொடர்ந்து நீடிக்கும் வரையில், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, ஆற்றலற்றதாக, பலனற்றதாகத்தான் இருக்கும்,"

—என்று, பி. சோ. கட்சித் தலைவர் டாக்டர் ராம் மனேகர் லோகியா குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"தெலிங்கானு, ஆந்திரா, வங்கம் ஆகிய இடங்களிலெல்லாம் காங்கிரசை முழு மூச்சாக எதிர்த்து வந்த கம்யூனிஸ்டுகள், இன்று பண்டித நேருவை, திடீரெனப் புகழுபவர்களாக — பாராட்டுபவர்களாக ஆகிவிட்டனர்; இந்த நிலை விசித்திரமானது."

மேலும் அவர் தெரிவித்திருக்கிருர்:—

"ம. சோ கட்சி, இன்று செயலற்றுவிட்டது; சட்ட சபைகளுக்கு உள்ளேயோ வெளியிலேயோ ஒரு நல்ல எதிர்க்கட்சியாக இல்லாமல், உபயோகமற்றதாக — ஆற்றலற்றதாகப் போய்விட்டது; கட்சிக்குள்ளிருக்கும் வேறுபாடுகளும், பூசல்களும் மக்களுக்குக் கட்சியிடத்தில் வெறுப்பை வளர்த்திருக்கின்றன;

"ஆட்குறைப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசிகளின் நிலையற்ற தன்மை, இவற்றை எதிர்த்துகூட போரிட கட்சி தவறிவிட்டது; எனவே, நான் கட்சியை சீர்திருத்தி அமைக்க விரும்புகிறேன்—அல்லது தனிக் கட்சி அமைக்க எண்ணுகிறேன்."

டாக்டர் லோகியா பத்திரிகையாளரிடம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறியிருக்கிருர்.

★

## பொறுப்புகளைத் தர மறுப்பு!

லக்னே, ஜூன் 16—

உத்திர பிரதேச ம. சோ. கட்சியின் 'அட்ஹாக்' குழுவின் பொதுச்செயலாளரான ஜி. சிங் என்பாரிடம், தேசீய நிர்வாகக் குழுவால் நீக்கிவைக்கப்பட்டிருக்கிற உ. பி. ம. சோ. கட்சி நிர்வாகக் குழுவினர், அலுவலகப் பொறுப்புகளை ஒப்படைக்க மறுத்துவிட்டதாகத் தெரிகிறது

நீக்கிவைக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் செயலாளரான ராம் சந்திர சுக்லாவிடம் அணுகி பொறுப்புகளைக் கேட்டபோது அவர் தர மறுத்துவிட்டதாக ஜி சிங் தெரிவித்திருக்கிருர்.

கடந்த ஜூன் 6-ம் தேதி, உத்திர பிரதேச ம. சோ. கட்சியின் நிர்வாகக் குழு நீக்கிவைக்கப் பட்டது.

## உத்திர பிரதேசத்திற்கு ரூ. 670 கோடி!

இரண்டாம் திட்டத்தில் பங்கு உத்திர பிரதேச மாநிலத்தின் உத்தேச ஐந்தாண்டுத் திட்டப்படி ரூ. 670 கோடி செலவாகுமென்று மாநில திட்ட மந்திரி சி. பி. குப்தா தெரிவித்திருக்கிருர்.

சமாதான இலட்சியம்

வல்லரசுகள் நம்பிக்கை

"சுதந்திரத்துடனும், நியாயத்துடனும் விடாமல் முயன்ருல் வரும் மாதங்களில் சமாதான இலட்சியத் திசையில் அதிகம் சாதிக்க முடியும்,"

என்று நம்பிக்கை தெரிவித்து, மூவல்லரசு வெளிநாட்டு அமைச்சர்கள்கூடி கூட்டறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளனராம்.

## மிராசுதாரர் — விவசாயிகள் மோதுதல்

### திருச்சி கிராமத்தில் விவசாயப் போராட்டம்

திருச்சி, ஜூன் 17—

திருச்சி வட்டம் ஆண்டநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த மிராசுதாரர்கள், தங்கள் நிலத்தில் பயிரிட முடியாதவாறு விவசாயிகளால் தடுக்கப்பட்டிருக்கிருர்கள்.

மிராசுதாரர்களின் நிலங்களிலிருந்து பலவந்தமாக மாடுகளையும், உரங்களையும் சுமார் 100 விவசாயிகள் அப்புறப்படுத்தினர் எனத் தெரிகிறது.

பண்ணைமுறைப்படி அக்கிராமத்தில் விவசாயம் நடைபெற்று வந்ததாகவும், கலத்திற்கு 2½ மரக்கால் விவசாயிகளுக்கு கூலி தரப்பட்டு வந்ததாயும், விவசாயிகள் அதிகம் கூலி கேட்டதாயும், இது பற்றி நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டனவென்றும் கூறப்படுகின்றது.

நேற்று நடைபெற்ற கூட்டங்களில் விவசாயத் தலைவர்கள், விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளில் உறுதியுடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனராம்.

இன்று காலை மிராசுதாரர்கள் தங்கள் நிலத்திற்கு உரமிடச் சென்றபோது, அவர்கள் தடுக்கப் பட்டிருக்கின்றனர்.

மிராசுதாரர்களில் ஒருவரும், கிராம அதிகாரியுமான சாத்தப் பெருமாள் பிள்ளையின் முயற்சியும் தோல்வி கண்டிருக்கிறது.

உதவி கலெக்டர், அடுத்துள்ள கிராமத்தில் கி. பு. கோ. 145-ம் பிரிவுப்படி தடை உத்திரவு பிறப்பித்திருப்பதுடன், அங்கு ஆயுதந் தரித்தபோலீசாரை அமைதியையும் சட்டத்தையும் நிலைநாட்டுவதற்காக வென்று நிறுத்தி வைத்திருப்பதாயும் கூறப்படுகிறது.

## 1957-ல் பொதுத் தேர்தல்

வருகிற 1957-ல் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தல் எல்லா மாநிலங்களிலும் ஒரே காலத்தில் நடைபெற வேண்டுமென்றும், இத்தேர்தலை நடத்த 1957 - ஜனவரித் திங்கள் சரியான காலமாக இருக்கும் என்றும் பிரதம தேர்தல் அதிகாரி சுகுமார் சென் குறிப்பிட்டிருக்கிருர்.

## கிராம மக்களுக்குக் கடன் வசதி

### ரூ. 250 கோடி ஒதுக்கல்?

கிராம மக்களின் கடன் வசதிக்காக 1960-ம் ஆண்டில் ரூ. 250 கோடி ஒதுக்க வேண்டும் என்று, இந்திய சர்க்கார், ஒரு இலட்சிய அளவை நிர்ணயித்திருக்கிருர்களாம். திரும்பப் பரிசிலனை செய்து இவ்வளவு தொகை தேவைப்படும் என்று சர்க்கார் மதிப்பிட்டிருக்கிருர்களாம்.

## 34 மின்சாரத் தொழிலாளர் கைது!

### வேலையிலிருந்து நீக்கப்பட்டதின் எதிரொலி

மதுரை, ஜூன் 17—

இங்கிருந்து எட்டு கல் தொலைவிலிருக்கும் சமயநல்லூரில் உள்ள மின்சார சேகரிப்பு நிலையத் தொழிலாளர்கள் 34 பேர் சட்ட விரோதமாக நிலையத்திற்குள் நுழைந்ததாகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

தோழர் முனுசாமி, மற்றும் 33 தொழிலாளர்கள் நேற்று முன்தினம் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டதாகவும், பின்னர் அவர்கள் நேற்று மாலை மின்சார நிலையத்திற்குள் நுழைந்துகொண்டு வெளியேற மறுத்ததாகவும், உதவி எஞ்சினியர் பிரபு என்பாரின் வேண்டுகோளும் புறக்கணிக்கப்பட்டதாயும், பின்பு போலீசார் உதவி நாடப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வேறு இரண்டு தொழிலாளர்கள், ஜூனியர் எஞ்சினியர் அனந்தராமன் என்பவரைத் தாக்கியதின் விளைவாக அவர் படுகாயம் பட்டு மருத்துவ மனையிலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 18—6—'55 சனி

# தேள் கொட்டுகிறது!

[I]

தேள் கொட்டுவது தேக ஆரோக்கியத்திற்கு உகந்தது எனக் கூறுபவர் இருக்க முடியாது. அப்படியும் கூறுபவர்கள் இருப்பார்களானல், அவர்கள் ஒன்று அறிவிலிகளாக இருக்க வேண்டும்; அல்லது பிறரைத் துன்புறுத்தி இன்பந் துய்க்கும் கீழ் மக்களாக இருக்க வேண்டும்.

சென்னையில் சேக்கிழார் தினம் கொண்டாடப்பட்டிருக்கிறது. அந்த விழாவில் கலந்து கொண்ட ஆதிக்கபுரியின் அனுதரட்சகரான இராஜகோபாலாச்சாரியார், செந்தேள் உருக்கொண்டு கொட்டியும் இருக்கிருர்—தேள் கொட்டுவது தேகாரோக்கியத்திற்கே என வாதிட்டும் இருக்கிருர்.

### தீவிர பக்தி!

"அரிசனங்களின் ஆலய நுழைவை சில வகுப்பினர் எதிர்க்கின்றனர் என்ருல், அதற்கு அவர்கள் கடவுளிடத்தில் கோண்டுள்ள தீவிர பக்தியே காரணமாகும். அரிசனங்களிடமோ அல்லது மற்ற பின்தங்கிய வகுப்பினர்களிடமோ பகைமை அல்லது துவேஷம் பாராட்டுவதாகக் கோள்ளலாகாது."

### பக்தி வேண்டும்!

"அரிசனங்களிடமும், பின்தங்கிய வகுப்பினர்களிடமும் பக்தியை ஏற்படுத்தத் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தினர் முயற்சிக்க வேண்டுமேயல்லாது, அவர்களை விசேஷ உரிமைகள் கோரி கிளர்ச்சி செய்யுமாறு தூண்டக்கூடாது."

### சட்டத்தால் முடியாது!

"வெறும் சட்டத்தின்மூலம் ஜாதி இந்துக்களின் மனதை மாற்றிவிட முடியாது. இது மிகவும் நுண்மையான பிரச்சினை. மிகவும் பொறுமையுடனும், பரஸ்பரம் அன்பு, நல்லெண்ணம் இவற்றின் மூலமே தீர்க்கப்பட வேண்டும்."

மேற்கூறிய ஒன்றுக்கொன்று முரண்படும் கருத்துக்களையும், ஆதிக்கபுரியினரின் ஆதிக்கக் காப்புக்கான அரிய கருத்தையும், ஆச்சாரியார், சேக்கிழார் தினத்தில் திருவாய்மலர்ந்தருளியிருக்கிருர்.

இரண்டாம் உலகப் பெரும் போருக்குமுன் ஆச்சாரியார் அமைச்சராக இருந்த காலத்தில், அரிசன ஆலய நுழைவை சட்டமாக்கிய 'மனிதாபிமான சீலராக' இதே ஆச்சாரியார்தான் இருந்தார். அந்த ஆச்சாரியார்தான், 'சட்டம் கூடாது; மனமாற்றம் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்; உரிமை கோரக் கூடாது; பொறுமையாக இருந்து அன்பு — நல்லெண்ணத்தைக் காட்டிக்கொள்ள வேண்டும்; பக்தி செலுத்த வேண்டும்,'— என, இன்று பிதற்றுகிருர்.

ஆச்சாரியாரின் இன்றைய பிதற்றல், அந்தக் காலத்தில் ஆலய நுழைவுச் சட்டத்தை அவர் கொண்டுவந்தது வெறும் விளம்பரத்திற்கு — பகட்டிற்கு —சொந்தப் புகழுக்கு என்ற உண்மையை திட்டவட்டமாகக் காட்டுகிறது. 'ஆலய நுழைவுச் சட்டத்தை இயற்றுவதின் மூலம் ஏற்படும் புகழ்—பாராட்டு அந்தக் காலத்தில் திருவிதாங்கூர் திவானுக இருந்த சர். சி. பி. இராமசாமி அய்யருக்கே போய்விடுவதா? அதில் நமக்கும் கொஞ்சம் பங்கு கிடைக்கட்டுமே,' என்ற உள்நோக்கத்தால்தான், அமைச்சராக இருந்த நேரத்தில் ஆச்சாரியாரும் ஆலய நுழைவுச் சட்டத்தை நிறைவேற்றினர் என்பது, அவருடைய இன்றைய உளறலால் தெற்றென விளங்குகிறது.

'அரிசன ஆலய நுழைவை உயர் ஜாதிக்காரர்கள் எதிர்ப்பது, அவர்களிடம் தாங்கள் கொண்டுள்ள பகையினலோ, குரோதத்தினலோ அல்ல; ஆனல், உயர் ஜாதிக்காரர்களிடம் குடிபுகுந்துள்ள '**தீவிர கடவுள் பக்தி**'தான், அந்த எதிர்ப்புக்குக் காரணம்,' என்கிருர், ஆச்சாரியார்!

உயர் ஜாதிக்காரர்களிடம் இருக்கும் '**தீவிர கடவுள் பக்தி,**' மற்ற தம்மின உயிர்களை இழிவாகக் கருதச் சொல்லுகிறது; கொடுமையாக நடத்தத் தூண்டுகிறது; 'தீண்டப்படாதார்' எனத் தள்ளி வைக்கப் போதிக்கிறது!

சிறந்த குற்றத் துறை வழக்கறிஞர் எனப் புகழப்படும் ஆச்சாரியாரின் ஆராய்ச்சி மிக்க கண்டுபிடிப்பு இது!

மனிதனை மனிதனுக ஒப்புக்கொள்வதை ஒதுக்கித் தள்ளுகிறது—**தீவிர கடவுள் பக்தி!**

மனிதனை மனிதன் சரிநிகர் சமம் என எண்ணுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது—**தீவிர கடவுள் பக்தி!**

'மனிதனை மனிதனுக நடத்துவது கூடாது,' எனக் கட்டளையிடுகிறது— **தீவிர கடவுள் பக்தி!**

தீவிர கடவுள் பக்திக்கு, ஆச்சாரியார் கூறும் அருட்பொருள் விளக்கம் இது!

மக்களாட்சி முறை, அனைவரையும் ஒன்றெனக் கொள்ளச் செய்வது; ஒருவருக்குள்ள உரிமை மற்ற ஒருவருக்கும் உண்டு என உறுதி கூறுவது; ஒரே வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் தேடித்தரும் ஆற்றல் கொண்டது.

மேற்குறிப்பிட்ட பண்புடைய மக்களாட்சி வாழ்க்கை சித்தாந்தத்திற்கு, ஆச்சாரியார் கூறும் விளக்கத்துடன் விளங்கும் தீவிர கடவுள் பக்தி நேர் முரணானதாகும் — அறவே அழித்துவிடக் கூடியதாகும்.

மக்களாட்சி முறையை வளர்க்கக் கருதுவோர், அதற்காகப் பாடுபடுவோர், ஆச்சாரியார் குறிப்பிடும் தீவிர கடவுள் பக்தியை ஆதரிப்பரா? அல்லது ஆழக் குழிதோண்டி புதைக்கக் கருதுவாரா?—என் பதில் முடிவு கூறும் பொறுப்பை வாசகர்களிடமே விட்டுவிடுகிறோம்.

'மக்களை ஒன்று சேரவிடாது, இழிவு படுத்திப் பிரித்துப் பிரித்து வைக்கும் நச்சுத் தன்மைகொண்ட தீவிர கடவுள் பக்தியை, அரிசனங்களும், மற்ற பின்தங்கிய வகுப்பினர்களும் பின்பற்றுமாறு, தீண்டாமை ஒழிப்புச் சங்கத்தினர் பாடுபட வேண்டும்' என ஆச்சாரியார் கோருகிருர்!

தீவிர கடவுள் பக்தியோ, மக்களிடம் வேற்றுமையைப் புகுத்தி வளர்த்துவந்திருக்கிறது; அனைவரும் சமம் என்பதை ஏற்றுக்கொள்ளத் தீவிரமாக மறுத்துவந்திருக்கிறது என்ற உண்மையை, ஆச்சாரியாரே, பிறர் மறுத்துக் கூற முடியாத நிலையில் விளக்கிக் காட்டி, நிலை நாட்டியுள்ளார்!

அதே கடவுள் பக்தியை அரிசனங்களிடம் ஏற்படுத்துவதினல், எப்படி அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள தீண்டாமைச் சுமை அகல வழி ஏற்படுமோ, நாம் அறியோம்! நம் போன்ற சாமானியர்களுக்கு, ஆச்சாரியாரின் அருள் வாக்கின் திறம் அறிதல் இயலாது போலும்!

பொன்னம்பலவாணனைக் காணக் கோரி, தீவிர கடவுள் பக்தியில் ஈடுபட்ட நந்தனர் பெற்ற பரிசு என்ன? தில்லை தீட்சதர்களால் சுட்டு சாம்பலாக்கப்பட்டதுதானே, கண்ட பலன்!

நந்தன், சாம்பலானது, அவன் பிறந்த குலத்தின் — இனத்தின், தீண்டாமைப் பிணியை, இன்றுவரை போக்க உதவிற்ரு? பழங்குடி மக்களின் பக்தி, ஆச்சாரியார் இன மக்களான அர்ச்சகர்களின் பக்தியைக் காட்டிலும் கடுகத்தனையும் குறைந்திருப்பதல்லவே!

இதுவரை, அவர்களுடைய அல்லலைப் போக்கவும், துன்பத்தைத் துடைக்கவும், கற்பிக்கப்பட்டக் களங்கத்தைக் களைந்தெறியவும், ஆச்சாரியார் கூறிடும் 'தீவிர பக்தி' பயன்பட்டிருக்கிறதா? ஆச்சாரியாருக்கு வக்குண்டா— வகையுண்டா, 'ஆம்' எனத் தலை அசைத்திட?

பொதுவான ஆலயத்தில், மக்களாகப் பிறந்தோர் அனைவரும் நுழைய வேண்டுமென்பது, மக்கள் அனைவருக்கும் பொதுவாக உள்ள குடி உரிமைப் பிரச்சினையாகும்;

அந்தப் பொது உரிமை, ஆலய அர்ச்சகர் நீங்கலாக பொதுவாக அனைவருக்கும்—குறிப்பாகப் பழங்குடி மக்களுக்கும், சட்டமியற்றிய பிறகும்கூட, இன்றும் மறுக்கப்பட்டு வருகிறது;

அந்தப் பொது குடி உரிமை, ஆச்சாரியார் குறிப்பிடுவது போல் விசேஷ உரிமையும் ஆகாது—சலுகை எனக் கூறப்படுவதும் பொருந்தாது;

ஆலய நுழைவு, மக்களாகப் பிறந்த அனைவரும் இயல்பாகப் பெற்றுள்ள பிறப்புரிமையாகும்;

ஆலய நுழைவால் தீண்டாமை ஒழிந்துவிடாது—தீண்டாமை ஒழிப்பு ஆலய நுழைவு இல்லாமல் முழுமை பெற்றும் விடாது.

ஆலய நுழைவில் இரண்டு பிரச்சினைகள் அடங்கி இருக்கின்றன;

ஒன்று, பொது குடிஉரிமை பிரச்சினை; மற்றென்று, பக்தியை நிறைவேற்றுவது;

பொது குடி உரிமை பிரச்சினை, மனித சமுதாயத்தின் பொதுப் பிரச்சினையாகும்.

பக்தியை நிறைவேற்றல், தனி மனிதனைப் பொருத்த விஷயம்;

நம்மைப் பொருத்தவரை, நமக்குள்ள கவலை எல்லாம், ஆலய நுழைவின் உள்ளடக்கமாக இருக்கும் இழிவு துடைக்கப்படும் பிறப்புரிமை பெறுவதைப் பற்றியதேயாகும்;

குறிப்பிட்ட பகுதி மக்கள், நீண்ட காலமாக இழந்திருந்த பிறப்புரிமையைப் பெறுவது, நமது குறிக்கோளில் தலை சிறந்த ஒன்ருகும்;

உரிமை வாழ்விற்கு எதிர்ப்பு— இடுக்கண் எந்த உருவில் ஏற்பட்டாலும், அதை எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெறவேண்டும் என்பது கோட்பாடு— செயல் ஏற்பாடு!

இதற்கு ஆச்சாரியார் மாற்றம் கூறுகிருர்—அதாவது, 'ஆலய நுழைவை ஒரு உரிமையாகக் கருதக்கூடாது; அதை உயர் ஜாதிக்காரர் மனமுவந்து செய்யும்—அல்லது கருணை மிகுதியால் தானமாகக் கொடுக்கும் பிச்சையாகக் கொள்ள, அரிசனங்களை, தீண்டாமை ஒழிப்புச் சங்கத்தினர் பயிற்றுவிக்க வேண்டும்' என்கிருர்!

தேள் கொட்டுகிறது!

ஆச்சாரியார் விஷத்தைக் கக்குகிருர்!

## இராசேந்திரரும் ரஷ்யா செல்கிருர்?

### ரஷ்ய மக்கள் சபை உறுப்பினர் இந்தியா வருவர்?

சோவியத் ரஷ்யத் தலைவர் விரோஷிலோவ், இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரரை, சோவியத் நாட்டிற்கு வருமாறு அழைப்பு அனுப்பியுள்ளாராம்.

இந்தியாவுக்கும் ரஷ்யப் பாராளுமன்றக் குழு வருகை தரும் என எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இந்தியப் பாராளுமன்ற மக்கள் சபைத் தலைவர் மாவ்லங்கரும், மேல்சபைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணனும் அனுப்பியிருந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டதின் பேரிலேயே அக்குழுவினர் வர இருப்பதாகக் கூறப்படுகிறது

## பால் காலனிகள் அமைக்கத் திட்டம்

சென்னை நகரத்தின் வெளிப்புறத்தில் பால் காலனிகளை ஆரம்பிக்கும் உத்தேசத் திட்டம், செங்கற்பட்டு மாவட்ட அதிகாரிகள் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

நகரத்திலுள்ள பால்காரர்களை நகரத்திற்கு வெளியே அகற்றி, அங்கிருந்து தொழிலை நடத்தச் செய்வதற்காக இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

இந்தப் பால் காலனிகளை, அலமாதி, திருவான்மியூர், வாடி, சௌரிவாச்சம், நாரவாரிக்குப்பம், மீஞ்சூர், கேளம்பாக்கம ஆகிய இடங்களில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், இத்திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

மேலும் மதுராந்தகம் தாலுகா எடக்காநாடு பகுதியில் கயிற்றுத் தொழிலை மேற்கொள்வதெனவும், என்னூர், புலிக்காடு, எடக்காநாடு, மற்றுமுள்ள இதர கடற்கரையோரப் பகுதிகளில் மீன் வளர்ப்புத் திட்டத்தை மேற்கொள்ளலாமெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

அதுதவிர, ஒவ்வொரு பகுதியிலும் (பிர்கா) ஒரு கிராமம் வீதம், 'வேலையில்லாதோர் இன்சூரன்ஸ் திட்டம்' மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

## ஒத்திகை நடத்துகிருர்களாம்!

### என்ன நாடகத்துக்கோ?

அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் மீது அணுகுண்டுத் தாக்குதல் நடைபெற்ருல் எப்படி 'முன் ஜாக்கிரதை'யாக நடந்துகொள்வது என்பதைப் பரிசோதனை செய்து பார்க்க 'ஒத்திகை' நடத்திப் பார்க்கப்பட்டதாம்!

அதன்படி, அபாயச் சங்கு ஊதியதும் குடியரசுத் தலைவர் ஐசனோவர், சாக்கார் இரகசிய காரியாலயத்திற்குக் கார் மூலம் புறப்பட்டுச் சென்ருராம். அந்த இடத்திலிருந்தே அவர் நிர்வாகத்தைக் கவனித்து நடத்திவரலாமாம்.

இந்த இரகசியத் தலைமைக் காரியாலயம், வாஷிங்டன் நகரிலிருந்து 30 கல் தொலைவுக்கப்பால் 300 மைலுக்குக் காடுகளடர்ந்த மலைப் பிரதேசத்தில் உள்ளது என்றுமட்டுமே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐசனோவரைத் தொடர்ந்து மற்ற அதிகாரிகளும் இந்தப் பிரதேசத்திலேயே மேற்படி காரியாலயத்தைச் சுற்றிலுமுள்ள சிற்சில இடங்களுக்குப் போய்விட்டனராம்.

இந்த ஒத்திகையைத் தொடர்ந்து அமெரிக்காவின் மற்ற 55 பெரிய நகரங்களிலும் அபாயச் சங்குகள் ஒலிக்குமாம்.

## மன்னர் வளைகுடா

### போக்குவரத்துத் திட்டம்

### இந்திய சர்க்கார் பரிசீலிக்கிறதாம்

மன்னர் வளைகுடா வழியாக கிழக்குக் கரையிலுள்ள துறைமுகங்களை மேற்குக் கரையிலுள்ள துறைமுகங்களுடன் இணைக்க, சென்னை சர்க்காரால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேசத் திட்டம் ஒன்றைப் பரிசீலிக்க, மத்திய சர்க்கார் போக்கு-வரத்து இலாகா ஒரு குழுவை நியமிக்கலாமென்றும், தற்போது இத்திட்டம், திட்டக் குழு, போக்கு-வரத்து இலாகா ஆகியவற்றின் பரிசீலனையில் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது இருந்துவரும் கடல் மார்க்கத்தின்படி, கிழக்கிலிருந்து மேற்குக் கரை துறைமுகங்களுக்கோ, அல்லது மேற்கு துறைமுகங்களிலிருந்து கிழக்குத் துறைமுகங்களுக்கோ வரவேண்டிய எல்லாக் கப்பல்களும் இலங்கையைச் சுற்றியேதான் செல்ல வேண்டியதாக இருக்கிறது; ஆனல், இப்புதிய திட்டப்படி இந்தப் பிரயாண தூரத்தில் 300 மைல்கள் குறைக்கப்படுமாம்.

இத்திட்டம் முடிவடைய ரூ 3 முதல் 4 கோடி வரையிலும் செலவாகலாம் என்றும், இத்திட்டத்தினல், இலங்கையிலிருந்து குடிபெயர்க்கப்படுகின்ற மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் ஏற்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

## புதியதல்லவே!

திருவனந்தபுரம், ஜூன் 15— "ஒவ்வொரு குடும்பத்தின் தலைவருக்கும் மாதமொன்றுக்கு வருமானமாக ரூ. 150 கிடைக்கக் கூடிய வகையிலும், மற்றவர்களுக்கெல்லாம் தலா ரூ. 100 கிடைக்கக்கூடிய வகையிலும் நில உடைமையை வரையறுக்க வேண்டும்."

என்று, திரு-கொச்சி பிரதேச காங்கிரஸ் குழுவின் நிலச் சீர்திருத்தக் குழு சிபாரிசு செய்துள்ளதாகத் தெரிகிறது.

## சீனுவுக்கு 50,000 பேல் கச்சாப் பருத்தி?

பம்பாய் ஜூன் 16— நடப்பு நிதி ஆண்டில் மக்கள் சீன சர்க்கார் 50,000 பேல் இந்தியக் கச்சாப் பருத்தியை விலைக்கு வாங்கும் என்று பருத்தி வர்த்தக வட்டாரங்களில் கூறப்படுகிறதாம்.

# ‘நேபாள புரட்சித் தலைவரை திருப்பி அனுப்பத் தயார்’

## நேபாள சர்க்காருக்கு சீனு அறிவிப்பு?

நேபாளத்தின் புரட்சித் தலைவரென வர்ணிக்கப்படும் டாக்டர் கே. ஐ. சிங் என்பாரை, நாட்டுக்கு திருப்பி அனுப்பத் தயாராயிருப்பதாகவும், அவருக்கு மனிதாபிமானத்துடன் மன்னிப்பு வழங்க வேண்டும் என்றும் சீனு தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அதிகாரிகள் இந்தக் கூற்றை மறுக்கவோ, உறுதிப்படுத்தவோ இல்லை.

1952-ல், தான் நடத்திய புரட்சி தோல்வியுறவே டாக்டர் சிங், திபெத்திற்கு ஓடிவிட்டார்.

ஒரு மாதத்திற்கு முன்பு, அவரைத் திருப்பி அனுப்பிவிடத் தயாராயிருப்பதாக திபெத்தில் உள்ள சீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவரது ஆதரவாளர்கள் அவர் நாட்டுக்குத் திரும்ப வேண்டும் என்றும், எப்போதும் அவர் நாட்டு மக்களிடம் விசுவாசம் கொண்டவர் என்றும் கூறுவதாகத் தெரிகிறது.

★

### ‘புரட்சித் தலைவர்’ நாடு திரும்புகிறார்

டாக்டர் கே. ஐ. சிங் என்ற நேபாள ‘புரட்சி’த் தலைவர் சீனுவிலிருந்து நேபாளம் திரும்புவார் எனத் தெரிய வருகிறது.

அவர் ஏற்கனவே சீனுவிலிருந்து புறப்பட்டு விட்டதாகவும் தெரிய வருகிறது.

# அண்ணுதுரை அவர்கள் வருகை

★

முன்னுள் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணுதுரை அவர்களிடம், தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிதி வசூலாகியுள்ள தொகையைப் பொதுக்கூட்டத்தில் கொடுக்க விரும்புவதாயும், தங்கள் மாவட்டத்தில் உடனடியாக சுற்றுப்பிரயாணம் செய்ய தேதி தரும்படியும் கடிதம் எழுதியிருக்கிறார்கள்; மிகவும் மகிழ்ச்சி.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அன்புடன் வாக்களித்தபடி நிதி வசூல் செய்திருக்கும் தொகையை உடனே பொதுச் செயலாளர் அவர்கள் முகவரிக்கு அனுப்பி வைத்து தோழர்கள் கடிதம் எழுதினால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான்கு நாட்களுக்கு சுற்றுப் பிரயாண நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்படுத்தி வெளியிடப்படும்.

தனித்தனி ஊர்கட்கு தோழர்கள் அழைப்புகள் அனுப்பாமல், தங்கள் மாவட்ட செயலாளருடன் கலந்து பேசி பொதுக்கூட்ட ஏற்பாடுகளைச் செய்க—மாவட்டச் செயலாளர் அவர்கள் மூலம் இங்கு செய்தி அனுப்ப வேண்டுகின்றோம்.

ஜூலை மாதம் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள் ஆரம்பமாகலாம்.

# நிலச் சட்டம் கோயில்களைப் பாதிக்கக்கூடாதாம்!

### காமராசருக்கு வேண்டுகோள்

திருநெல்வேலி, ஜூன் 16—

சர்க்கார் கொண்டுவர இருக்கும் நிலச் சீர்திருத்த மசோதாவினால் கோயில்களின் நலன்களும், அங்கு நடைபெறும் வழக்கமான பூசைகளும், உற்சவங்களும் பாதிக்கப்படக் கூடாதென்று முதன் மந்திரியிடம் தாம் தனிப்பட்ட முறையில் கேட்டுக் கொண்டுள்ளதாக மாநில அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனர் டி எஸ். சங்கரவடிவேலு கூறியிருக்கிறார்.

விவசாயக் கடன் நிவாரண சட்டத்திலிருந்து கோயில்களுக்கு விதி விலக்கு அளிக்காததால் வாரகுத்தகைப் பாக்கிகளை வசூலிக்க முடியவில்லை என்றும், இதன் விளைவாக சிறு சிறு கோயில்களின் வழக்கமான பூசைகள் முதலியன பாதிக்கப்பட்டு விட்டன என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

‘இது தவிர, தானியங்களின் விலைவாசிகள் இறங்கியிருப்பதாலும் கோயில்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது’ என்றும் குறிப்பிட்டிருக்கிறாராம்.

# விசித்திரம் தரும் வேதனை!

தார்வாரிலுள்ள நிங்கப்பு பூசாரி எனப்படும் ஒருவர், தமது கழுத்தில் பாம்புகளைப் போட்டுக் கொண்டு புகைப்படம் பிடிக்க விரும்பி, படம் எடுக்கப்படுகையில் அப்பாம்பினாலேயே கடிக்கப்பட்டு மரணமுற்ற நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்தப் பூசாரி இங்குள்ள சாயி பாபா மடத்தைச் சேர்ந்தவர் என்றும், தம்முடைய விருப்பப்படி, பாம்பாட்டி ஒருவரிடமிருந்து இரண்டு பாம்புகளை வாடகைக்கு வாங்கிக் கழுத்தில் போட்டுக் கொண்டு புகைப்படம் பிடிக்கும் போது, அவர், பாம்பு படமெடுத்து நிற்கும்படி அதைத் துன்புறுத்தியதாகவும், அப்போது, நச்சுப் பல் பிடுங்கப்படாத ஒரு பாம்பு அவரைக் கடித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

உடனே அவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டும் உயிர் பிழைக்கவில்லையாம்!

### கைத்தொழில் நிபுணர்கள் நால்வர் ஜப்பான் செல்வர்

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 4 தொழில் நுணுக்க நிபுணர்களை அகில இந்தியக் கைத்தொழில் குழு பொறுக்கி எடுத்து ஜப்பானுக்கு அனுப்புமாம்.

பிரம்பு சம்மந்தமான பொருட்களை உற்பத்தி செய்வது, ‘பாக்’ செய்வது, விற்பனை செய்வது ஆகியவற்றில் ஜப்பானிய முறையிலும் பயிற்சிபெறவே அவர்கள் அனுப்பப்படுவராம். அவர்கள் ஜப்பான் சென்று திரும்பியதும் கைத்தொழில் பயிற்சி அளிப்பார்கள் எனத் தெரிகிறது.

# தி. மு. கழக மாநில மாநாட்டு நிதி

★

திருச்சியில் நடைபெறப்போகும் மாநில மாநாட்டு நிதிக்கு நன்கொடை, வரவேற்புக் கட்டணத் தொகை அனுப்பி வைக்கும் தோழர்கள், காஞ்சிபுரத்திற்கும், சென்னைக்கும் தோழர் சி. என். அண்ணுதுரை அவர்கள் முகவரிக்கு அனுப்பி வைக்காமல்,

“பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தலைமை தி. மு. கழகம், ‘அறிவகம்’ இராயபுரம், சென்னை-13”

—என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

சென்னை-13 } போறுப்பாளர்,
7—6—’55. } ‘நம் நாடு.’

# ஏழை மாணவர்களுக்கு

### பள்ளிக் கட்டணத்திலிருந்து விலக்களிக்க, உத்தரவு

சென்னை, ஜூன் 15—

1955—56-ம் பள்ளிக்கூட ஆண்டிலிருந்து எல்லா ஆரம்பப் பள்ளி வகுப்புகளிலும், நடுநிலைப் பள்ளிகளில் 3-ம் படிவம் வரை பயிலும் எல்லா ஏழை மாணவர்களுக்கும் பள்ளிக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கவேண்டுமென்று சென்னை நகர சபையினருக்கும், இதர நிறுவனங்களுக்கும் விடுத்துள்ள உத்தரவொன்றில்சென்னை சர்க்கார் குறிப்பிட்டுள்ளது.

ஒரு ஏழை மாணவனின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் மொத்த ஆண்டு வருமானம் எல்லா துறைகளிலும் ரூ. 1200-க்கு மேற்படாதிருந்தால் அந்த மாணவர்களனைவருக்கும் இச்சலுகை காட்டப்படும் என்று இந்த உத்தரவு கூறுகிறது.

ஆனால் இச்சலுகை பெறும் மாணவர், எந்த வகுப்பிலாவது அல்லது படிவத்திலாவது பரீட்சையில் தேறாமலிருந்தால் அச்சலுகை உடனே நிறுத்திவைக்கப்படுமாம். அத்துடன் இரண்டாவது ஆண்டுத் தேர்விலும் தோற்றுவிட்டால் மேற்படி சலுகை திரும்பிப் பெற்றுக் கொள்ளப்படுமாம்; ஆனால், அடுத்த மேல் வகுப்புக்கோ, படிவத்திற்கோ பரீட்சை எழுதித் தேறினால் திரும்பிப் பெற்றுக்கொள்ளப்பட்ட சலுகை மீண்டும் அளிக்கப்படுமாம்.

ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகள், இந்த சலுகையினால் அடையும் சம்பள வருமான நஷ்டம் முழுவதும் சர்க்காரால் ஈடுசெய்யப்படுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# ஒழுங்கு நடவடிக்கை!

காராச்சி, ஜூன் 16—

“பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைக்கு உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ள முஸ்லீம் லீக் கட்சி அபேட்சகர்களின் தேர்தலை எதிர்க்கின்ற முஸ்லீம் லீகர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டி வரும்,”

என்று பாகிஸ்தான் முஸ்லீம் லீகின் தலைவரான பாக். முதலமைச்சர் முகமதலி எச்சரிக்கையொன்று விடுத்துள்ளாராம்.

மத்திய முஸ்லீம் லீக் பாராளுமன்றக் குழுவின் முடிவை நிராகரித்து முன்னுள் பஞ்சாப் முதலமைச்சரான பெரோஸ்கான் நூனும், அவரது குழுவினரும் தேர்தலில் போட்டியிடுவதென முடிவு செய்ததே இந்த எச்சரிக்கைக்குக் காரணம் என்று கூறப்பட்டிருக்கிறது.

‘கட்சிக் கோட்பாடுகளை மீறுவது கட்சிக்கோ, நாட்டுக்கோ நல்லதல்ல’ என்று முகமதலி தமது எச்சரிக்கைக் குறிப்பில் தெரிவித்துள்ளாராம்.

1952—54-ம் ஆண்டு காலத்தில், இந்திய இரயில்வேக்களில் புதிதாக விடப்பட்ட வண்டிகளின் மொத்த எண்ணிக்கை 342 ஆகும்.

# அர்ஜெண்டைனுவில் உள்நாட்டுக் குழப்பம்

## தலைவர் பெரானுக்கு எதிராக இராணுவத்தினர் கிளர்ச்சி

## சர்க்காருக்கும் மதவாதிகளுக்கும் போராட்டம்

பியூனஸ் அயர்ஸ், ஜூன் 16—

அர்ஜெண்டைனுவில், தலைவர் பெரான் சர்க்காருக்கு எதிராக, கப்பல், விமானப் படையினர் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனராம்.

பெரான் சர்க்கார், கத்தோலிக்க மதத் தலைமையால், இந்தக் கிளர்ச்சிக்கு சில மணி முன்புதான் மதப் பிரஷ்டம் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

பெரான் சர்க்கார் ரோமன் கத்தோலிக்க தேவாலயங்களுக்கு விரோதமான நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காகவே ‘மதப் பிரஷ்டம்’ செய்யப்பட்டதாக கத்தோலிக்க தலைமை சார்பாக வெளிவந்த வானொலி அறிவிப்பு கூறுகிறது.

சர்க்கார் அலுவலகத்தின் முன்பாக கிளர்ச்சிக்காரர்கள் 5 குண்டுகளை வெடித்தனராம்.

தெருப்புக்கள் நகரத் தெருக்களில் கூடிநின்றிருந்தனவாம்; நகர் முழுதும், குண்டு வெடிச் சத்தம் கேட்டுக்கொண்டேயிருந்ததாம்.

இராணுவத்தினரும், கப்பல், விமானப் படையினரும் கலகம் விளைவிக்கப் போவதாக நகரில் வதந்திகள் உலவுகின்றனவாம்.

அர்ஜெண்டைன குடியரசு தலைவரான பெரானை ஆதரிக்குமாறு தொழிலாளர்கள் வேண்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

குண்டு பொழிந்து கிளர்ச்சி செய்யும் இராணுவத்தினரின் நான்கு விமானங்களில் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாயும், மற்ற மூன்றும் கட்டாயமாக இறங்குமாறு செய்யப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

நகர் முழுதும் போக்குவரத்து நின்றுவிட்டது.

நகரில் அமைதி நிலவுவதாகவும், இராணுவத்தின் ஒரு பகுதி மட்டுமே கிளர்ச்சியிலீடுபட்டதாகவும் சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

இதற்கு முன்பாக, ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தைச் சேர்ந்த இரண்டு பிரதான குருமார்கள், சர்க்கார் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய மறுத்தமைக்காக கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டனர் என்றும், அவர்கள் ரியோடி ஜினிரோவில் வந்து சேர்ந்துள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

# அண்ணுதுரை

### சுற்றுப்பயணம்

19—6—55: காலை 10 மணிக்கு: திருச்சி-திருமண நிகழ்ச்சி;
மாலை 6 மணிக்கு: திருச்சி மாவட்ட தி. மு. கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதியளிப்பு-பாராட்டுக் கூட்டம்.

20—6—55: மாலை 6 மணிக்கு: பேராவூரணி: மாநில மாநாட்டு நிதியளிப்பு-பொதுக் கூட்டம்

21—6—55: மாலை 6-மணிக்கு: பட்டுக்கோட்டை: மாநில மாநாட்டு நிதியளிப்பு-பொதுக் கூட்டம்.

22—6—55: மாலை 6 மணிக்கு: முத்துப்பேட்டை: மாநில மாநாட்டு நிதியளிப்பு-பொதுக் கூட்டம்.

23—6—55: காலை: வேளூர் திருமண நிகழ்ச்சி;
மாலை 6 மணிக்கு: மாயவரம்: மாநில மாநாட்டு நிதியளிப்பு-பொதுக்கூட்டம்

இந்நிகழ்ச்சிகளில் அண்ணு அவர்களுடன் தோழர் அ. பொன்னம்பலனுர், தோழர் கே. ஏ. மதியழகன் ஆகியவர்களும் கலந்து கொள்வார். தஞ்சை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்களும் தஞ்சை மாவட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்.

# கழகச் செய்திகள்

### திருமங்கலம் தி. மு. கழகம்

14—6—55 இரவு 10 மணியளவில் பகுத்தறிவு இளைஞர் படிப்பகத்தில் தோழர் இரசாக் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 19—6—55ல் நடைபெற இருக்கும் கழகப் பொதுக்கூட்டத்தின்போது மாநில மாநாட்டு நிதி அளிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

### பொன்மலை — மேலக்கற்கண்டார்கோட்டை தி. மு. கழகம்

5—6—55 மாலை 7 மணிக்குக் கழகப் பணி மனையில் தோழர் கே. துரைராஜ் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களது அன்னையார் இயற்கை எய்தியமை குறித்து அனுதாபம் தெரிவித்துக் கொண்டும், இரண்டாவது மாநில மாநாட்டு நிதிக்கு கிளைக் கழகத்தின் சார்பில் ரூ. 25 தருவதெனவும், அதற்குக் கிளைக் கழக உறுப்பினர்களிடமிருந்து நன்கொடை வசூலிப்பதென்றும், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியனும், அண்ணுவும் திருச்சிக்கு வரும்போது கிளைக் கழகத்தின் சார்பாக வரவேற்பளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### சென்னை 3-வது வட்ட தி. மு. கழகம்

11—6—55 மாலை 3 மணிக்கு, கழக மனையில் நடைபெற்ற கழகச் செயற் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில், அண்ணு, தோழர் கே. எம். கண்ணபிரான் ஆகியோருக்கு நன்றியறிதலும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மாவட்டச் செயலாளர் இனம்பரிதி ஆகியோருக்குப் பாராட்டுதலும் தெரிவித்துக் கொண்டும், கிளைக் கழகத் தோழர் வை. அண்ணமலை இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டும் கழக சந்தா, பொதுக்கூட்ட வரவு - செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், இறுதியாக, இக்கிளைக் கழகத் துணைச் செயலாளர் மாவட்டப் பிரதிநிதி, பாதுகாப்பாளர்களான முறையே டி. எம். பாண்டியன், எம். குப்புராஜ், எஸ். பாண்டியன் ஆகியவர்கள், பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வதைக் கண்டித்தும், இன்னும் ஒரு வாரத்தில் அவர்கள் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து நடந்துகொள்ளத் தவறினால் 19—6—55 காலை 10 மணிக்கு கழக அறையில் செயற் குழு கூடி, புதிய பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# நன்றி அறிவிப்பு

“1—6—55 அன்று, மன்னார்குடியில் நடைபெற்ற எங்கள் திருமணத்திற்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும், அன்பளிப்புகள் அளித்தும் எங்களை மகிழ்வித்தத் தோழர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்,”

என்று, தோழர் பி. வேலாயுதம் —தோழியர் விஜயலட்மி அம்மையார் அறிவித்துக்கொள்கின்றனர்.

### பொத்தனூரில் நாடகவிழா

5—6—55ல், இவ்வூர் தி. மு. கழகச் சார்பில், வள்ளுவர் மன்றத்தினரால் தோழர் மு. கருணாநிதியின் ‘பரப்பிரம்மம்’ நாடகம் அழகிரி அரங்கில், வி. காளியப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஒ. எம். சுப்பிரமணியம் நாடகச் சிறப்பு பற்றிப் பேசினார். நாமக்கல் தோழியர் குமாரி சரசுவதி நாட்டியமும் நடைபெற்றது. தோழர் க. சிவப்பிரகாசம் நடிகர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

# அடுத்த பொதுத் தேர்தல்

## மாநிலப் புனரமைப்புக் குழு அறிக்கைக்குப் பின்புதான் முடிவா?

நைனிடால், ஜூன் 17—

"மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை வந்த பின்னர்தான், அடுத்த பொதுத் தேர்தல் பற்றி ஆராய்ந்து முடிவு செய்யப் படும்,"

என்று, இந்திய சர்க்கார் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் தெரிவித்திருக்கிறார்.

"சாதாரணமாகப் பொதுத் தேர்தல்கள், ஐந்தாண்டுகளுக்குப் பின்னர்தான் நடைபெற வேண்டும்; ஆனால், அப்படி நடப்பது மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளைப் பெரிதும் பொறுத்திருக்கிறது," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் கிடைத்ததும், பொது மக்கள், சட்டசபைகள், சம்மந்தப்பட்ட மாநில சர்க்கார்கள் ஆகியோர்களைக் கலந்தாலோசிப்பதற்கென தற்காலிகத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுமென்றும், அவர்களைக் கலந்தாலோசித்த பின்னரே சர்க்கார் இறுதியான ஒரு முடிவை மேற்கொள்வர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### இந்தி பற்றி பேசுகிறார்!

இந்தியைக் குறிப்பிட்டு அவர் பேசுகையில், 15 ஆண்டுகளுக்குள் இந்தி மொழி ஆட்சி மொழியாக மாறவேண்டுமென்ற அரசியல் சட்டப் பிரிவின்படி நடந்து கொள்ளவே சர்க்கார் விரும்புகிறதென்றும், ஆயினும் அதற்காக, மத்திய 'சர்வீஸ்' பரீட்சை எழுதுவோர் பாதிக்கப்படக்கூடாது என்று சர்க்கார் விரும்புவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

---

காங்கிரஸ் ஆளவந்தார் போக்கில்

## போர்த்துகீசியர் ?

கோவா, ஜூன் 17—

கோவா விடுதலை இயக்கத் தொண்டர்களை அடித்துத் துன்புறுத்தி கோவாவைவிட்டு வெளியேற்றி வந்த போர்ச்சுகீசிய அதிகாரிகள், இப்போது அத்தொண்டர்களை இழிவு படுத்தும் நோக்கத்துடன், அவர்களுடைய தலையிலும், முகத்திலுமுள்ள மயிரை விதவிதமாகச் சிரைத்து அனுப்புகிறார்களாம்.

மாருதி ராவ் காந்தி என்பவரை தோதா மார்க்கெட் எனுமிடத்தில் கொட்டும் மழையில் கொண்டுவந்து நிறுத்தி அவரது தாடியில் இடது பக்கம், மீசையில் வலது பக்கம், இடது புருவம் (கண்ணுக்கு மேல்) ஆகிய இடங்களைச் சிரைத்துவிட்டதுடன், தலையில் துப்பாக்கியினுல் அடித்துக் காயப்படுத்தினர் என்றும், சாமராவ் எனும் மற்றொரு தொண்டரின் தலையில், 'பி' என்ற எழுத்து மாதிரி தலைமயிரை வைத்துவிட்டு மற்ற இடங்களிலெல்லாம் சிரைத்துவிட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவர்களைப் போலவே மற்றும் பல தொண்டர்களிடமும் தங்கள் 'கைவரிசை'யைக் காட்டியிருக்கிறார்கள் போர்ச்சுகீசிய 'போலீஸ் ஆவரக்காரர்கள்'!

தொண்டர்கள் விடுதலை செய்யப்படுமுன் போர்ச்சுகீசியரால் பலமாக நையப்புடைக்கப்பட்டனராம். இரவு முழுமையும் நடுக்காட்டில்—கொட்டும் மழையில் கிடந்து துன்புற்ற அந்தத் தொண்டர்கள், மறுநாள் சவந்தவாடி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனராம்.

அவர்கள் அணிந்திருந்த சட்டைகளில் 'போர்ச்சுகல் வாழ்க' என்று சிவப்பு மையினால் கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்ததாம்.

---

நந்திகொண்டா அணைத் திட்டத்தின் மூலம் மொத்தம் சுமார் 20 லட்சம் ஏகர் நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும்.

## ரூ. 10 லட்சம் அபினி

கள்ளத்தனமாகக் கடத்த முயற்சி

கள்ளத்தனமாகக் கடத்த முயற்சிக்கப்பட்ட சுமார் ரூ 10 இலட்சம் பெறுமானமுள்ள அபினியை கொழும்பு சுங்க இலாகா அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனராம்.

மேற்படி அபினி கள்ளத்தனமாகக் கடத்தப்பட இருக்கிறது என்று முன்கூட்டியே அவர்களுக்கு தகவல் கிடைத்த பின்னரே மேற்படி அதிகாரிகள், அபினி எங்கு மறைத்து வைக்கப்பட்டுள்ளதென்று தேடி, இறுதியில் ஒரு டீசல் மோட்டார் ஜெனரேட்டரை சந்தேகத்துடன் சோதனையிட்டபோது அதில் அபினி பொட்டலங்கள் காகிதங்களில் மடித்து மறைத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு பிடித்தார்கள் என்றும் ஆஸ்திரேலியாவுக்குக் கப்பலேற்றப்பட இருந்த அந்த ஜெனரேட்டர் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பாரசீக வியாபாரிக்காக 850 ராத்தல் அபினியை கப்பலில் ஏற்றியதாக கப்பல் அதிகாரி ஒப்புக்கொண்டார் எனக் கூறப்படுகிறது.

தற்போது அந்த ஜெனரேட்டர் துறைமுக அதிகாரிகளிடம் இருந்துவருவதாகவும், புலன் விசாரணை நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

---

### ராணுவ அதிகாரிகளுக்கு வீட்டு வசதி

திருமணமான இராணுவ அதிகாரிகளுக்கு குடியிருப்பு வசதியை அதிகப்படுத்துவது சம்பந்தமான திட்டம் ஒன்று அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுமென்று கூறப்படுகிறது.

## நேருவுக்கு லண்டன் அழைப்பு

ரஷ்யச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்புகையில், இங்கிலாந்திற்கு வருமாறு பிரதமர் நேருவுக்கு பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடன் அழைப்பு அனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது.

அழைப்பை ஏற்றுக்கொண்டு, வரும் ஜூலை 9 அல்லது 10-ந் தேதியன்று நேரு லண்டனில் இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இதுபற்றி, செய்திகளை உறுதிப்படுத்த இங்குள்ள இந்திய அலுவலகம் மறுத்துவிட்ட போதிலும் பண்டித நேரு ரஷ்யத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி முதலிலேயே தாங்கள் தகவல்கள் தெரிந்துகொள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்புகிறதாம்.

---

## குறிப்பிட்ட ஒரு .....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் மேலும் பேசும்பொழுது பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"அரசியல் சுதந்திரம் பெற்றவுடன், அண்மையில் கழிந்த இறந்த காலத்தை மறந்து, தொலைவில் கழிந்த இறந்த காலத்துக்கு, மக்கள் பெருஞ்சிறப்புக் கொடுக்கிறார்கள். எடுத்துக்கொள்ளப்பட்ட பெருமுயற்சியால், பாரசீக மொழி ஆதிக்கத்தை ஒழிக்க இந்திய மக்களால் இயலவில்லை. இந்நிலையில், ஆங்கில மொழி ஆதிக்கத்தை அறவே ஒழிப்பதில் அவர்கள் வெற்றி பெறுவார்களா ?"

---

### மன்னர் 'மாஜி'யாகிறார்?

வியட்நாம் மன்னர் பாவோ-டாயை மன்னர் பதவியினின்றும் விலக்கிவைத்துவிட்டதாக பாவோ-டாயின் அரச குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் அடங்கிய குழு ஒன்று அறிவித்திருக்கிறது.

---

# 'கத்தோலிக்க மதம் வேண்டுமா—வேண்டாமா?'

## அர்ஜெண்டைனாவில் வாக்கெடுப்பு

தலைவர் பெரான் அறிவிக்கிறார்

மாண்டிவிடியோ, ஜூன் 17—

"அர்ஜெண்டைனாவில், ரோமன் கத்தோலிக்க மதம்தான் அரசாங்க மதமாக இருக்க வேண்டுமா—என்பதைக் கண்டறிய சீக்கிரமே ஒரு பொது வாக்கெடுப்பு நடைபெறும்,"

என்று அர்ஜெண்டைனா மக்களுக்கு குடியரசுத் தலைவர் பெரான், வானொலி மூலம் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"என்னுடைய அரசாங்கம் தவறுகள் செய்திருந்தால் அடுத்து வரும் பொதுத் தேர்தலின்போது, மக்கள், அதுபற்றிய தங்கள் கருத்தைத் தெரிவிக்கவிருக்கிறார்கள்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

★

## நிலைமை அமைதி பெறுகிறது

பியூனஸ் அயர்ஸ், ஜூன் 16—

அர்ஜெண்டைனா முழுவதும் இராணுவச் சட்டம் பிரகடனம் செய்து தலைவர் பெரான் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

கத்தோலிக்க மதத்திலிருந்து பெரான் சர்க்கார் 'மதப்பிரஷ்டம்' செய்யப்பட்ட சில மணி நேரத்தில் நடைபெற்ற கப்பல், விமானப் படையினரின் தோல்வியுற்ற 'கலக'த்தைத் தொடர்ந்து, இந்த இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

நாடு இப்போது அமைதியுற்றிருப்பதாகவும், 'கலக'த்தில் ஈடுபட்ட கப்பல், விமானப்படையினர் அடக்கப்பட்டு சரணடைந்து விட்டனர் என்றும் பெரான் தெரிவித்திருக்கிறார்.

நாட்டு மக்கள் கிலேசம் கொள்ளாதிருக்கக் கேட்டுக் கொண்டதுடன் அவர், கலகத்தினை ஒடுக்குவதில், இராணுவத்தினர் காட்டிய விசுவாசத்திற்காக நன்றியும் தெரிவித்துக்கொண்டார்.

## போப் தந்த வரவேற்பு

வாடிகன் நகர், ஜூன் 17—

அர்ஜெண்டைனாவிலுள்ள கத்தோலிக்க தேவாலய அதிபர்கள் இருவர் நாடு கடத்தப்பட்டனர் அல்லவா ?

அந்த இரு குருமார்களும் இங்கு வந்தபோது, கத்தோலிக்க மதத் தலைவர் போப் பயஸ், அவர்களை வரவேற்று பேச்சுவார்த்தைகள் நடத்தினதாகத் தெரிகிறது.

அப்போது அந்த குருமார்கள் அர்ஜெண்டைனாவில் உள்ள கத்தோலிக்க மதக் கோவில்களின் நிலை பற்றி முழுவதும் எடுத்துக் கூறினர் என்றும் தெரியவந்திருக்கிறது.


ஒப்பற்ற கலை விருந்து! ஒரே நாள் மட்டும்!!

ஜூன் 19 ஜூன் 19

ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

சென்னை தியாகராயர் கல்லூரி மண்டபத்தில்

மு. கருணாநிதி எழுதிய

மணிமகுடம்

(புதிய நாடகம்)

இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன், பி. எஸ். வெங்கடாசலம், எம். என். ராஜம், இந்திரா, மோகனா மற்றும் ராஜேந்திரன் நாடக மன்றத்தார் நடிப்பது

★

★ தமிழகத்து நாடக மேடையிலே புதியதோர் திருப்பம்!

★ கொள்கை விளக்கும் ஓவியம்!

★ கொஞ்சு தமிழ்க் காவியம்!

★ முற்றிலும் புதிய அமைப்பு!

பாடல்கள்: ஆத்மநாதன், முத்துக்கூத்தன்

டிக்கெட்:— ரூ. 3, 2, 1, அணா 8


## திருச்சியில்

தி. மு. க. மாநில மாநாட்டு

## நிதியளிப்பு விழா

★

பொதுச்செயலாளர் வரவேற்பு

## பொதுக்கூட்டம்

19—6—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஏ. பி. தர்மலிங்கம்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

இரா. நெடுஞ்செழியன்

கே. ஏ. மதியழகன்

அரங்கண்ணல்

தில்லை-வில்லாளன்

—திருச்சி மாவட்ட தி மு க

---

## கழகக் கூட்டங்கள்

★

பேராவூரணி

காணிப்பதிவு மனைக்கு அருகாமையில்

(முன்பிருந்த சினிமாக் கொட்டகை திடலில்)

20—6—55 மாலை 6½ மணிக்கு

தலைவர்: எஸ். ஜெயராமன்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

என். எஸ். இளங்கோ

சொற்பொழிவாற்றுவதற்கு முன், பேராவூரணி தி. மு. கழக நகரக் கிளை சார்பாகவும், சுற்றுப்புறக் கிளைக் கழகச் சார்பாகவும் மாநில மாநாட்டு நிதியளிப்பு நடைபெறும்.

★

பட்டுக்கோட்டை

காசாங்குளம் வடகரையில்

21—6—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

---

### சென்னை தமிழாசிரியர் கழகம் உறுப்பினர் பொதுக்கூட்டம்

★

19—6—55 மாலை 4½ மணிக்கு, சென்னை, தங்கசாலை தெருவிலுள்ள தொண்டைமண்டலம் உயர்நிலைப் பள்ளியில், திரு. மயிலை-சிவமுத்து தலைமையில், மேல் நாட்டு கல்வி முறைகளைக் குறித்து டாக்டர் சிதம்பரநாதன் சொற்பொழிவாற்றுவார். மாலை 5½ மணிக்கு உறுப்பினர் பொதுக்கூட்டம் நிகழும்.

தி.மு.க. பொதுச்செயலாளர்

## நெடுஞ்செழியன் வேலாயுதம்பாளையம் வருகை

★

"20—6—55 அன்று (புகளூர்) வேலாயுதம்பாளையத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, வேலாயுதம்பாளையம் கிளையின் சார்பில் வரவேற்பும், மாநில மாநாட்டு நிதி அளிப்பும் நடைபெறும்.

"அன்று மாலை 4-30 மணிக்கு, மாபெரும் சைக்கிள் ஊர்வலம் நடைபெறும். சுற்றுவட்டாரக் கிளைக் கழகங்கள் சைக்கிள்களுடனும், கொடிகளுடனும் கலந்துகொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, வேலாயுதம்பாளையம் கிளை தி. மு. கழகச் செயலாளர் தோழர் க. பெரியசாமி அறிவிக்கிறார்.

---

### பொதுக்கூட்டங்கள்

★

19—6—55 காலை 10 மணிக்கு, திருநின்றவூர்-தாசர்புரத்தில் 'அன்னை சமா' அறிவகம் (இலவச நூல் நிலையம்) சார்பில், தோழர் சி. எட்வர்டு தலைமையில் நடைபெறும். தோழர்கள் வி. பார்த்தசாரதி, சேதுராமன், சமா. தமிழ்ச்செல்வன் ஆகியோர் பேசுவர்.

* * *

20—6—55 மாலை 6 மணிக்கு, ஆம்பூர் மொகமதலி திடலில், திருவள்ளுவர் கழகச் சார்பில் தோழர் ஏ. பெருமாள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் திருக்குறளார் வீ. முனுசாமி எம். பி., ஆர். சுலைமான் ஆகியோர் பேசுவர்.

---

### சொற்பயிற்சிக் கூட்டம்

★

19—6—55 இரவு 7 மணிக்கு, வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகத்தில், தோழர் செ. பாண்டியன் தலைமையில் 'இந்தியாவின் வடக்கும், தெற்கும்' என்னும் பொருள் பற்றி உறுப்பினர்கள் பேசுவர்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.